<u>திருவாரூர் நகராட்சி</u>

## விகாரி ஆண்டு ஆவணி 11ம் 28.08.2019ம்தேதி புதன்கிழமை காலை 10.45 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

முன்னிலை.திரு என்.சங்கரன், B.Com., HDCM.,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்

---

பொருள்.1

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை உள்ள கால கட்டங்களில் குடிநீர் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக குடிநீர் டேங்கருடன் கூடிய டிரைலர் விநியோகம் செய்யும் பணிக்கு 11.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர் திருவாரூர் | ரூ.172500/- | மதிப்பீட்டைவிட 36.23% சதவிகிதம் அதிகம் |
| 2. | திரு.எஸ்.ரெங்கசாமி ஒப்பந்ததாரர் திருவாரூர் | | மதிப்பீட்டைவிட 33.33% சதவிகிதம் அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட கூடுதலாக உள்ளதால் திரு.எஸ்.ரெங்கசாமி, ஒப்பந்ததாரர், திருவாரூர் அவர்களுக்கு மதிப்பீட்டு விலை விகிதத்தினை குறைத்துதர 15.07.2019 அன்று கடிதம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திரு.எஸ்.ரெங்கசாமி, ஒப்பந்ததாரரின் 17.07.2019 ந்தேதிய கடிதத்தில் தற்போது உள்ள தளவாடப் பொருட்களின் விலை உயர்வு, ஆட்களின் சம்பள உயர்வு போன்ற காரணங்களால் விலை குறைப்பு செய்துவிட இயலாது எனவும், இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதின் பேரில் 4.95% சதவிகித கூடுதல் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. திரு.எஸ்.ரெங்கசாமி, ஒப்பந்ததாரர், திருவாரூர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. நகராட்சி பொறியியல் கையேடு தொகுதி (1) பகுதி (2) பிரிவு 2.7.2ன் படி பணியின் முக்கியத்துவம் கருதி மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் வரை கூடுதலாக அனுமதிப்பது தொடர்பாக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. 2019-20 -SOR ன் படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் குறைவானதும் வழங்கப்பட்ட விலை குறைப்பு சம்மதக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விளக்கத்தினை ஏற்கவும், பின்னர் மதிப்பீட்டினைவிட கூடுதலாக பெறப்பட்ட விலை விகிதத்தினை, ரூ 1.81 இலட்சத்தினை அளித்துள்ள திரு.எஸ்.ரெங்கசாமி, ஒப்பந்ததாரர். திருவாரூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் கூடுதல் விலை விகிதத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2019/இ1

மன்ற தீர்மான எண்.87
அனுமதிக்கப்பட்டது

---

பொருள்.2

திருவாரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வரப்பட்ட ஆட்டோ வாகனத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பழுதினை உடன் நீக்கம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள "மெர்சஸ் தர்மராஜ் ஆட்டோ காரேஜ், திருவாரூர்" நிறுவனத்தின் மூலம் ரூ.7,000/- க்குள் பணி மேற்கொள்ளப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியினை மேற்கொள்ளப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்ற தீர்மான எண்.88
அனுமதிக்கப்பட்டது

3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3533/2019/இ1

பொருள்.3

மன்ற தீர்மான எண்.89 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் நீர்தேக்க நிலையங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் மின்மோட்டார்களில் பழுதடைந்த நிலையில் உள்ள 7 மின் மோட்டார்களை தங்குதடையின்றி குடிநீர் விநோயகம் செய்வதற்காக பழுதுநீக்கம் செய்யும் பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் "திரு.கே. கண்ணன், ஜே.கே. எலெக்ட்ரிகல் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருவாரூர்" அவர்களின் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்குண்டான உத்தேச செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3534/2019/இ1

பொருள்.4

மன்ற தீர்மான எண்.90 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பழுதடைந்த நிலையில் உள்ள தார்சாலைகளை செப்பணிட தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019-20 கீழ் ரூ 100.00 இலட்சத்திற்கு திட்ட அறிக்கை முன்மொழிவுகள் கேட்கப்பட்டதற்கிணங்க கீழ்கண்ட சாலைகளை தேர்வு செய்து முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | சாலைகளின் நீளம்(மீட்டரில்) | மதிப்பீடு ரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 17 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பெருமாள் மட விளாகத்தில் தார் சாலை அமைக்கும் பணி | 400 | 29.50 |
| 2. | 2 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட சிவப்பிரகார மடத்தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 400 | 29.50 |
| 3. | 4 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தென்றல் நகரில் தார் சாலை அமைக்கும் பணி | 500 | 41.00 |
| | | | 1300 | 100.00 |

<table>
<tr><td>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.3521/2019/இ1
</td><td></td></tr>
<tr><td>
பொருள்.5<br>
திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தாழை.மு.கருணாநிதி வணிகவளாகம், பனகல் சாலை, திருவாரூரில் அமைந்துள்ள கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதனை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் அப்பொருட்களை ஏலதாரரே எடுத்துக் கொள்ளும் பணிக்கு 21.08.2019 அன்று மறுபொது ஏலம் விடப்பட்டதில் கீழ்கண்ட ஏலதாரர்கள் கலந்து கொண்டவர்களின் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><td>வ. எ ண்</td><td>கலந்துக் கொண்ட ஏலதாரர்களின் விபரம்</td><td>ஏலக்கேள்வி தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>திரு.எம். அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர்.</td><td>1,93,000</td></tr>
<tr><td>2.</td><td>திரு. பாசிக்முகம்மது. சுப்பையா பிள்ளைத் தெரு. புலிவலம்</td><td>1,92,000</td></tr>
<tr><td>3.</td><td>திரு.எஸ். ஸ்டாலின் 55 C/1. பஜனை மட சந்து, திருவாரூர்.</td><td>1,91,000</td></tr>
<tr><td>4.</td><td>திரு. சுரேஷ்குமார், நெய்விளக்கு தோப்பு, திருவாரூர்.</td><td>1,91,500</td></tr>
</table>
மேற்கண்ட ஏலத்தாரர்களில் அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்கப்பட்ட திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர் அவர்களின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு.<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்கண்ட பணியினை பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய திரு.எம். அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர் அவர்களின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வினை ஏற்கலாம்.<br>
3. மேலும் மேற்கண்ட பணியாளரின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.4127/2018/இ1
</td><td>மன்ற தீர்மான<br>எண்.91<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>
பொருள்.6<br>
சுதந்திர தின விழா -2019னை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் தற்காலிக கழிவறை மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 07.08.2019 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் பின்வருமாறு.
<table>
<tr><td>வ. எ ண்</td><td>ஒப்பந்ததாரர்களின் விபரம்</td><td>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</td><td>மதிப்பீட்டு விலை விகிதம்</td></tr>
<tr><td>1.</td><td>திரு.எம். தேன்மொழி, ஒப்பந்ததாரர், திருவாரூர்.</td><td rowspan="2">0.90</td><td>மதிப்பீட்டைவிட 7.61% சதவிகிதம் மிககுறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எல். மணிகண்டன்,</td><td>மதிப்பீட்டைவிட 7.49% சதவிகிதம் குறைவு</td></tr>
</table>
</td><td>மன்ற தீர்மான<br>எண்.92<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | |
|---|---|
| ஒப்பந்ததாரர்,<br>திருவாரூர். | |
| வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட மிகக்குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள “திரு.எம். தேன்மொழி, ஒப்பந்ததாரர், திருவாரூர்” என்பவரின் மிகக்குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு..<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட மிகக்குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>3. மேற்கண்ட பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் உடன் பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3264/2019/இ1 | |
| பொருள்.7<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட நெய்விளக்கு தோப்பில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஆழ்துளை கிணற்றில் உள்ள நீர்மூழ்கி மோட்டார் பழுதாகி போரிலேயே விழுந்துவிட்டப்படியால் தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் அப்பகுதி பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு..<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கோள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்./2019/இ1 | மன்ற தீர்மான<br>எண்.93<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள்.8<br>திருவாரூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பள்ளிக்கூடங்களின் நிலத்தடி நீரின் மட்டத்தினை உயர்த்த தற்போது கீழ்கண்ட பள்ளிகளில் புதியதாக மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>பள்ளிகளின் விபரம்<br>வ.எண் பள்ளிகளின் விபரங்கள்<br>1. கௌரிசாமி நகராட்சி நடுநிலைபள்ளி<br>2. கேக்கரை நகராட்சி துவக்கப்பள்ளி<br>3. கொடிக்கால்பாளையம் நடுநிலைப்பள்ளி<br>4. பாவா கோபால் சாமி நடுநிலைப்பள்ளி<br>5. சபாபதி முதலியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளி<br>6. விஜயபுரம் நகராட்சி துவக்கப்பள்ளி<br>7. கே.டி.ஆர். நகராட்சி துவக்கப்பள்ளி<br>அலுவலக குறிப்பு.<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட பணியினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>3. பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளிக்கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்./2019/இ1. | மன்ற தீர்மான<br>எண்.94<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள்.9<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தாழை.மு.கருணாநிதி வணிக வளாகம் மற்றும் பழைய தஞ்சை சாலையிலுள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு பொது ஏல | மன்ற தீர்மான<br>எண்.95<br>அனுமதிக்கப்பட்டது |

அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டமைக்கான விளம்பர கட்டணத்தொகை ரூ.4383/-னை “EXPRESS PUBLICATIONS(MADURAI) PRIVATE LTD.”, நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்குண்டான விளம்பர கட்டணத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1130/2018/இ1

---

மன்ற தீர்மான எண்.96 அனுமதிக்கப்பட்டது

பொருள்.10

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 திடக்கழிவு மேலாண்மையின் கீழ் நுன்னிய நுண்உயிரி கிடங்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு 7வது மாநில உயர்மட்ட குழுவின் பரிந்துரையின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.22886/2018/ப்பி3 நாள்.23.08.2018ல் தென்றல் நகர், கமலாம்பாள் நகர் மற்றும் நகராட்சி அலுவலகம் பின்புறத்தில் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து ரூ.155.34 இலட்சத்திற்கு திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளதற்கு இந்நகர் மன்றத்தீர்மானம் எண்.96 நாள் 28.8.2018ல் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதனைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.9018/ப்பி3/2018 நாள். 3.01.2019ல் கீழ்கண்ட விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்விபரம் பின்வருமாறு.

திட்ட மதிப்பீடு ரூ.140.340 இலட்சம்
மத்திய அரசின் பங்கு(35%) ரூ.49.119 இலட்சம்
மாநில அரசின் பங்கு(55%) ரூ.77,187 இலட்சம்
நகராட்சி பங்கு(10%) ரூ.14.034 இலட்சம்

எனவே மேற்கண்ட திட்ட பணியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.155.34 இலட்சத்தில் தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.140.34 இலட்சம் போக மீதமுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.15.00 இலட்சத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட திட்ட பணிக்கு வரப்பெற்ற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட கடிதத்தினை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4322/2018/இ1

---

மன்ற தீர்மான எண்.97 அனுமதிக்கப்பட்டது

பொருள்.11

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத்திட்ட நிதி 2019-20ன் கீழ் உந்து நிலையங்களில் பாதாளச் சாக்கடை கழிவுநீர் மோட்டார்களை பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு (8 எண்ணிக்கைகள்) 14.8.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | மதிப்பீடு விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | மெர்சஸ்.வி..பி. அசோசியட்ஸ், சென்னை | 9.60 | மதிப்பீட்டைவிட 0.19% சதவிகிதம் குறைவு |
| 2. | திரு.எஸ். தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | | மதிப்பீட்டைவிட 0.47% சதவிகிதம் அதிகம். |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள “மெர்சஸ்.வி.பி.அசோசியட்ஸ்,சென்னை” என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்./2019/இ1

| | |
|---|---|
| பொருள்.12<br>திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணி மேற்கொள்ள 24 எண்ணிக்கையில் BOV வரப்பெற்றுள்ளது. பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் வாகனம் வருவது பொது மக்கள் அறியவும் 24 எண்ணிக்கையுள்ள ஒலி பெருக்கி அமைப்பது அவசியமாவதால் 24 எண்ணிக்கையில் ஒலி பெருக்கி வாங்கிட SBMIEC Activities பணி மேற்கொள்ள தோராய செலவீனம் ரூ.1.50 லட்சம் செலவினம் மேற்கொள்ளவும் மன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண். 3016/2018/எச்1)<br>அலுவலக குறிப்பு..<br>மன்றம் அனுமதிக்கலாம். | மன்ற தீர்மான எண்.98 அனுமதிக்கப்பட்டது |
| பொருள்.13<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4980/2018/ஜே, நாள் 07.08.2019 ன்படி திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு ஓட்டுநர்கள், 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துகளின்றி பணிபுரிந்த 2 ஓட்டுநர்களுக்கு தமிழக அரசுவழங்கும் தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி தங்கப்பதக்கம் சென்னை எழுதுபொருள் அச்சகத்துறையிடமிருந்து பெற்று வழங்கவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அன்னார்களுக்கு வழங்கக்கூடிய தங்கப்பதக்கத்திற்கான செலவினத்தொகை, நகராட்சி பொதுநிதியிலிருந்தே செய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி செலவினத்திற்கும் ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்றிதழ் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு.<br>1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | மன்ற தீர்மான எண்.99 அனுமதிக்கப்பட்டது |
| பொருள்.14<br>திருவாரூர் நகராட்சி விஜயபுரம் வட்டம் தியாகப்பெருமாநல்லூர் கிராமத்தில் நகரளவு எண் வார்டு எண் 3, பிளாக் -இல் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தில் உள்ள தெற்கு புறம் உள்ள கடைகளை மாத வாடகை அடிப்படையில் அனுபவித்துக்கொள்ளும் உரிமம் இனத்திற்கு கீழ்கண்டவாறு ஏல பொறுப்புத் தொகை நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | மன்ற தீர்மான எண்.100 அனுமதிக்கப்பட்டது |

| உரிம இன்ம எண். | உரிம இனங்களின் விபரம் | உரிமம் கால அளவு | ஒப்பந்தப் புள்ளி/ஏல பொறுப்புத் தொகை ரூ. | சொத்து மதிப்புச் சான்றிதழ் 1.9.2019க்கு பிறகு பெற்றிருக்க வேண்டும் ரூ. | சொத்துமதிப்பு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத்தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | ஒவ்வொரு கடைக்கும் தலா ரூ. | | |
| 11 | தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்துநிலையம் தெற்கு புறம் உள்ள கடைகளை மாத வாடகை அடிப்படையில் அனுபவித்துக் கொள்ளும் உரிமம் கடை எண்கள் 61.62,63,64 | ஒப்படைக்கும் நாள் முதல் 9 ஆண்டுகள் தொகுப்பு கால அளவு | 4,50,000/- | 9,00,000/- | 4,50,000/- |

அலுவலக குறிப்பு

மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2506/2017/அ5

ஒம்/-என். சங்கரன்
ஆணையர்/ தனி அலுவலர்,
திருவாரூர் நகராட்சி.

இடம் ..திருவாரூர்
நாள்..28,08,2019